

தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் 67 வது நினைவு நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க.சார்பில் மாவட்ட கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தியாகி இம்மானுவேல் சேகனார் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் விஜிலா சத்யானந்த், ஏ.எல்.எஸ்.லெட்சுமணன்,சித்திக் எஸ்.வி.சுரேஷ்,கிரிஜாகுமார்,கே. ஆர்,ராஜ்,சரவணன்,பரமசிவ ஐயப்பன்,அண்ணாதுரை துபாய் சாகுல்,கருப்பசாமி கோட்டையப்பன்,மீரான் மைதீன், நவநீதன், அனிதா, தொப்பி மைதீன், நெல்லை ரவி செண்டு போத்திக்கண்ணு, வெயிலியப்பன், பள்ளிக்கோட்டை செல்லத்துரை, கண்ணன், சாகுல் ஹமீது, மாரியப்பன்,கல்கி ராஜா, சமுத்திரம்,சேக்உஸ்மானி, பொன்பாண்டி,ஜபருல்லா, முத்துசாமி,ரேவதி அசோக், தேவிகா,பூங்கனி, அருணாசலதேவி,மேகை செல்வம்,பேபி கோபால், மாரிமுத்து,ஜெயின்உசேன், மணிகண்டன்,முறுக்கு சாகுல், அந்தோணி,சாலி மௌலானா, படப்பை மனோகரன்,சிந்து முருகன்,பாஸ்கர்,பச்சிராஜன், பத்மராஜ்,அமினா சாதிக்,பாலன் என்ற ராஜா,ரம்ஜான் அலி,சுந்தர், நித்திய பாலையா,சங்கர் முத்தையா,ராவணன்,பிரிட்டோ, சுரேஷ்,தங்கராஜ்,பேபி குமார், ஆப்டிகல் பாலா,பிரான்சிஸ்,அலி பக்ருதீன் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்டம் பாளை தெற்கு,மத்திய ஒன்றிய தி.மு.க சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் பாளை ஹைகிரவுண்ட் சொர்ண மகாலில் அவை தலைவர்கள் நம்பி ரெட்டியார், நாராயணன் நாடார் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.நிகழ்வில் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ். தங்கபாண்டியன்,மத்திய ஒன்றிய செயலாளர் போர்வெல் கணேசன், மாநில தொண்டரணி துணை செயலாளர் ஆவின் ஆறுமுகம்,மாநில விவசாய தொழிலாளரணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன்,துணை செயலாளர்கள் அனுராதா ரவி முருகன்,கண்ணன், செல்லத்துரை சுரேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சித்திக், பொதுக்குழு உறுப்பினர்கள் கனகராஜ்,பரமசிவ ஐயப்பன், மாவட்ட பிரதிநிதிகள் மாரிசாமி, கண்ணன், ஊராட்சித் தலைவர்கள் ரத்தினம், ஐயப்பன்,குமரேசன்,நம்பிராஜன், ராமகிருஷ்ணன், ராஜாராம்,திருப்பதி மணிகண்டன், பேச்சியம்மாள், ஒன்றிய பொருளாளர்கள் செல்வ சங்கர், காந்தி பாண்டியன்,துணை அமைப்பாளர் இசக்கிபாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி – மா.மதிவேந்தன் – அந்தியூர் செல்வராஜ் எம்.பி. – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. பங்கேற்பு!

# பரமத்தி வேலூர் தொகுதி புதிய கட்டிடம் - கலைஞர் அரங்கம் திறப்பு விழா!

## நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் மதுரா செந்தில் அறிக்கை!



நாமக்கல், செப். 12-

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை வருமாறு:-

பரமத்தி வேலூர் தொகுதி புதிய கட்டிட அலுவலகம் கலைஞர் அரங்கம் திறப்பு விழா கழகத் தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் நல்லாசியுடன், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களுடன் இன்று (செப்டம்பர் 12ஆம் தேதி வியாழக்கிழமை), காலை 10.00 மணியளவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் கழக பவள விழா ஆண்டை முன்னிட்டு வேலூரில் 60 அடி நினைவு கொடிக்கம்பத்தில் கழக இருவண்ணக்கொடியை கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் பி.செல்வராஜ் ஏற்றி வைத்து சிறப்பிக்க உள்ளார்.

மேலும், காலை 10.30 மணிக்கு பரமத்திவேலூர் தொகுதி புதிய கட்டிட அலுவலகம் கலைஞர் அரங்கம், இ சேவை மையம், கலைஞர் படிப்பகம் மற்றும் புதிய பொது உறுப்பினருக்கான அட்டை வழங்கும் விழா பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் மற்றும் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் கே.ஆர்.என். ராஜேஸ்குமார் திறந்து வைத்து சிறப்புரையாற்றவுள்ளார்கள்.

மாநில வர்த்தக அணி துணைத் தலைவர் கே.எஸ். மூர்த்தி, கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் தமிழன் பிரசன்னா, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பி.எஸ். சீனிவாசன் மற்றும் மாநில மகளிர் தொண்டர் அணி துணை செயலாளர் ஜே. ரேகா பிரியதர்ஷினி ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளதால், இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதி கள், சார்பு அணி நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டம் மேல்விஷாரம் நகர மன்ற தலைவரும், நகர கழக செயலாளருமான எஸ்.டி.முகமது அமீன் அவர்கள் இயற்கை எய்தினார். அவர்களின் உடலுக்கு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி,விஸ்வாஸ் பள்ளி தலைவர் கமலா காந்தி, கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத் காந்தி ஷிலா வினோத் காந்தி, ஜி.கே.குழுமம் சந்தோஷ்காந்தி ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தி,அவர்களின் குடும்பத்தினருக்கும் மற்றும் கழக உடன்பிறப்புகளுக்கு ஆறுதல் கூறினார்கள். உடன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ, தொழிலதிபர் சௌகார் முன்னாபாய், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி மற்றும் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர பேரூர் செயலாளர்கள் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.

### திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி

# ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நேர்காணல்!

## சி.ஜெரால்டு, தமிழரசன், எம்.எஸ்.தரணிவேந்தன், டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் பங்கேற்பு!

திருவண்ணாமலை, செப். 12-

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் நடைபெற்றது. மாநில மாணவர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு, துணைச் செயலாளர் இரா.தமிழரசன், வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் நேர்காணலில் பங்கேற்றனர்.

தமிழ்நாடு முதல மைச்சர், கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின், பொதுப்பணித்துறை அமைச்சர் . எ.வ.வேலு, சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, தி.மு.க. மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் நடைபெற்று வருகிறது.

11.09.2024 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் சாலை, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி, ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் நடைபெற்றது.

வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., கழக மருத்துவரணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவண்ணாமலை வடக்கு மாவட்டத்தின் சார்பில் 350க்கும் மேற்பட்டோரும், தெற்கு மாவட்டத்தில் 300க்கும் மேற்பட்டோர் நகர, ஒன்றிய, பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தனர்.

பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களை மாநில மாணவர் அணி இணை செயலாளர் சி.ஜெரால்டு அவர்களும், மாநில மாணவரணி துணை செயலாளர் இரா.தமிழரசன், வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் ஆகியோர் நேர்காணல் நடத்தினர்.

நிகழ்ச்சியினை தெற்கு மாவட்ட அமைப்பாளர் காலேஜ் கு.ரவி, வடக்கு மாவட்ட அமைப்பாளர் இ.எஸ்.கார்த்திகேயன் தலைமையில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மு.க.கௌதமன், இரா. மின்னல்.கமல், ஏ.வெங்கடாஜலபதி, ஆ. மாதேஸ்வரன், தேவிதேவேந்திரன், வடக்கு மாவட்டம் கே.வி. ஆர்.சுரேஷ்பாபு, ஷேக்ஷர்புதீன், பா.தமிழரசன், பி.ஜி.மணிபாரதி, கீர்த்தனாஅரவிந்தன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.



தேனி வடக்கு மாவட்டம் பெரியகுளம் தொகுதி பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் அலுவலகத்தில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. கலைஞர் கனவு இல்லம் பயனாளிகளுக்கு பணி ஆணை வழங்கினார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., பெரியகுளம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் தங்கவேல், வடக்கு ஒன்றிய செயலாளர் எல்.எம்.பாண்டி மற்றும் அரசு அதிகாரிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெ.சு. திருவேங்கடம்

**செப்டம்பர் 12 (2022)**



1954ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கி கிளாம்பாடி கிளைச் செயலாளராகி, அதனைத் தொடர்ந்து ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், சட்டதிட்டக்குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், சொத்துப் பாதுகாப்புக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் செயலாளர், தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றியக்குழு துணைத் தலைவர், ஒன்றியக்குழு தலைவர், நான்கு முறை கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

2017ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் அவர்கள் திருக்கரங்களால் "அண்ணா விருது" பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மேல்விஷாரம் நகரக் கழகச் செயலாளர்

# எஸ்.டி.முகமது அமீன் மறைவு!

## அமைச்சர் ஆர்.காந்தி நேரில் அஞ்சலி!

இராணிப்பேட்டை, செப்.12–

இராணிப்பேட்டை மாவட்டம், மேல்விஷாரம் நகரக் கழக செயலாளரும், நகர மன்றத் தலைவருமான S .T. முகமது அமீன் (வயது 58) நேற்று (11.09.2024 - புதன் கிழமை) அதிகாலை 3.00 மணியளவில் மாரடைப்பால் மறைவெய்தினார் என்கிற வருத்தமான செய்தியை தெரிவிக்க வருந்துகிறோம்.

இவரது மனைவி திருமதி. ரிஸ்வான் பேகம், இரண்டு மகன்கள் 1. முகமது அசனத், 2. செயின் காசிக், இரண்டு மகள்கள் 1. ரசிகா, 2.நெஸ்வா (மகள்கள் இருவரும் திருமணமானவர்கள்)

இவர் 1984ஆம் ஆண்டு முதன் முதலாக மேல்விஷாரத்தில் இஸ்லாமிய தோழர்களுக்காக "இஸ்லாமிய வெல்பர் அசோசியேசன்" சங்கத்தை துவக்கி, பொருளாதாரத்தில் பின் தங்கிய இஸ்லாமிய தோழர்களுக்காக திருமண உதவி, மருத்துவ உதவி, கல்வி உதவி, ஆகிய பொது சேவையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு திறம்பட பணியாற்றியவர்.

இவர் மேல்விஷாரத்தில் நகரக் கழக துணைச் செயலாளர், நகரமன்ற உறுப்பினர், தற்போது நகரக் கழக செயலாளர், நகர மன்றத் தலைவர் ஆகிய பொறுப்புகளை வகித்து, பொறுப்புகளுக்கு தனது செயலின் மூலம் பெருமையை தேடித் தந்தவர்.

தலைமைக் கழகத்திற்கும், மாவட்டக் கழகத்திற்கும், கடமை உணர்வோடு கட்டுப்பட்டு செயலாற்றி, கழகத்திற்கு பெருமையை தேடித் தந்தவர்.

கழகத் தலைவர், தமிழக முதல்வர் தளபதி அவர்கள் மீதும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மீதும் அன்பும், பாசமும் கொண்டவர்.

மறைவுச் செய்தியறிந்ததும் மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி நேரில் சென்று அன்னாரது உடலுக்கு மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தி குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்.

இவரது மறைவால் இராணிப்பேட்டை மாவட்டம் முழுவதும் இரங்கல் தெரிவிக்கும் வகையில் 3 நாட்கள் துக்கம் அனுசரித்து, கழக நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்து, கழக கொடிகள் அரை கம்பத்தில் பறக்க விடப்படுகின்றன.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். ஸ்ரீதர்

**செப்டம்பர் 12 (2020)**



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

நாகப்பட்டினம் நகரத்தில் வட்ட பிரதிநிதியாகவும், நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**